PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jnrgroup.org

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 21 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 132

பேசத் தயங்கும் விஷயங்களின் மவுனத்தை உடைக்கும் மலேசிய தமிழ் க்ரைம் த்ரில்லர் 'இரும்புத் தோட்டம்; விரைவில் தமிழகமெங்கும் ரிலீஸ்'!

சென்னை – 21 நவம்பர், 2026 விஜய்யின் 'ஜனநாயகன்' பட புகழ் இர்ஃபான் ஜைனி நடிக்கும் மலேசியத் தமிழ்ப்படம் 'இரும்புத் தோட்டம்'!

'அடுத்த கட்டம்', 'மைந்தன்' படங்களைத் தொடர்ந்து HAVEN PICTURES, RK கண்ணன் வெளியிடும் மூன்றாவது மலேசியத் தமிழ்ப்படம் 'இரும்புத் தோட்டம்'!

ஏ.வி.எல்.டி புரொடக்ஷன் (AVLT PRODUCTION) சார்பில் | ஜெகன் ஜான் பீட்டர் (Jegen John Peter) தயாரிப்பில் மலேசியாவில் உருவாகியுள்ள தமிழ்ப்படம் 'இரும்புத் தோட்டம்'.

புலனாய்வு க்ரைம் த்ரில்லர் ஆக உருவாகியுள்ள இப்படத்தை ஜெயதேவ் ஜெயகுமார் இயக்கியுள்ளார்.

முழுக்க முழுக்க மலேசியாவில் எடுக்கப்பட்டுள்ள இந்த தமிழ்ப்படம் விரைவில் தமிழகமெங்கும் ரிலீசாக இருக்கிறது.

'அடுத்த கட்டம்', 'மைந்தன்' படங்களைத் தொடர்ந்து தமிழகத்தில் HAVEN PICTURES RK. கண்ணன் வெளியிடும் மூன்றாவது மலேசியத் தமிழ்ப்படம் இது.

நடிகர் விஜய்யின் 'ஜனநாயகன்' மற்றும் 'கோட்' திரைப்படங்களின் மூலம் பெரும் கவனத்தைப் பெற்ற இர்ஃபான் ஜைனி இதில் கதாநாயகனாக நடிக்கிறார்.

மேலும் லோகவர்மன் ஸ்ரீதரன், மேரி தாஷினி மேத்யூஸ், மோகன ராஜ், துர்காஷினி எஸ். வினோஷன், பாலன் காஷ், டத்தோ கீதாஞ்சலி G, கலைமாமணி கே. எஸ் மணியம், நிஷா மற்றும் விஜய் நாயுடு உள்ளிட்ட மலேசியாவைச் சேர்ந்த நட்சத்திரங்கள் இதில் நடித்துள்ளனர்.

மலேசியத் தேசிய ஒருமைப்பாட்டுத் துணை அமைச்சர் துவான் யுனேஸ்வரன் ராமராஜ் இப்படத்தில் 'துவான் தெய்வீகன்' என்ற சிறப்புத் தோற்றத்தில் நடித்துள்ளார். பதவியில் இருக்கும் ஒரு துணை அமைச்சர் மலேசியத் தமிழ்த் திரைப்படத்தில் நடிப்பது இதுவே முதல் முறையாகும்.

தினேஷ் குமார் @ டி.கே ஒளிப்பதிவு செய்ய, ஷமேஷன் மணிமாறன் இப்படத்திற்கு இசையமைத்திருக்கிறார். இயக்குநர் ஜெயதேவ் ஜெயகுமாரே படத்தொகுப்பையும் கவனித்துள்ளார்.

ஒரு மாணவியின் மர்மமான கொலை, அதைச் சுற்றி ஒரு ஆசிரியர் மேல் எழும் சந்தேகம்.. தடயவியல் டிடெக்டிவ் அதிகாரி ஒருவர் உள்ளூர் காவல்துறை அதிகாரியுடன் இணைந்து இந்த வழக்கை விசாரிக்கிறார். விசாரணையின் போக்கில் பல ரகசியங்கள் முடிச்சு முடிச்சாக அவிழ்கின்றன. உண்மையான கொலையாளி யார் எனக் கண்டுபிடிப்பதுடன் சமூகத்தின் மேலோட்டமான பிம்பத்திற்குப் பின்னால் மறைந்திருக்கும் கசப்பான உண்மைகளைத் தேடும் நீதிக்கான பயணமே இந்த 'இரும்புத் தோட்டம்'.

படம் குறித்து இயக்குநர் ஜெயதேவ் ஜெயகுமார் கூறும்போது, "நவீன சமூகத்திலும் கூட பேசத் தயங்கும் விஷயங்களைச் சுற்றியுள்ள மவுனத்தை உடைப்பதே 'இரும்புத் தோட்டம்' படத்தின் மூலம் எனது நோக்கமாக இருந்தது. குற்றப் புலனாய்வுத் திரைப்படங்களின் தீவிர ரசிகன் என்ற முறையில், இந்தக் கடினமான சமூக யதார்த்தங்களைப் பேசுவதற்குப் புலனாய்வு வகையின் விறுவிறுப்பையும் பதற்றத்தையும் ஒரு பாலமாகப் பயன்படுத்த விரும்பினேன்.



கதாபாத்திரங்கள் மற்றும் சூழல் அனைத்தும் எனது சிறுவயது நினைவுகளிலிருந்து எடுக்கப்பட்டவை என்பதுடன், எனது சொந்த ஊரான மலாக்காவில் உள்ள டெபோங்கில் தான் முழுப் படத்தையும் படமாக்கியுள்ளோம். சமூக விதிமுறைகள் குறித்த பார்வையாளர்களின் கண்ணோட்டத்திற்குச் சவால் விடுவது போல இப்படம் இருக்கும்" என்கிறார்.

இப்படம் விரைவில் திரைக்கு வரும் விதமாக பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

இப்படத்தின் ரிலீஸ் தேதி குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாக இருக்கிறது.

தொழில்நுட்பக் கலைஞர்கள்

இயக்கம், திரைக்கதை & படத்தொகுப்பு: ஜெய்தேவ் ஜெயகுமார்

தயாரிப்பாளர்: ஜெகன் ஜான் பீட்டர்

கிரியேட்டிவ் ஹெட் (Creative Head): கார்த்திக் ஷாமளன்

ஒளிப்பதிவாளர்: தினேஷ் குமார் @ டி.கே (Thinesh Kumar @ TK)

இசையமைப்பாளர்: ஷமேஷன் மணிமாறன் (Shameshan Mani Maran)

உதவி இயக்குநர்கள்: சதீஸ்வரராவ் அனந்தராவ், தேவபிரசாந்த் ஆர். விஸ்வலிங்கம்

ஆடை வடிவமைப்பு: ஜெய துர்கா தேவி

ஒளிப்பதிவுக் குழு: ரவி தமிழரசன், சதீஷ், லோகன், மேகன் ஆர்ட்ஸ், ஜோனாதன், தேவ்குமார்

கலை இயக்குநர்: ரஜினி காந்த்

ஒப்பனைக் கலைஞர்கள்: ஷோபனா ஸ்ரீ, ஷீலா

விஷூவல் எஃபெக்ட்ஸ் (VFX): மனோஜ் குமார் கணபதி

தயாரிப்பு மேலாளர்கள்: அபோ ஷஃபிக் (Aboh Shafiq), பரதன் பாலச்சந்திரன்

மக்கள் தொடர்பு; A. ஜான்